உ
சிவமயம்



# நினைவுக்கலசம்

05.09.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை கும்பிறுப்பிட்டியை
பிறப்பிடமாகவும் நிலாவெளி
2ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## த. தங்கத்துரை, த. சங்கவி,

நிலாவெளி 2ம் வட்டாரத்தை
பிறப்பிடமாகக் கொண்ட

## சுகந்தன் பிரணவி,
## சுரேஸ் ஹேறசிக்ராஜ்,
## சுரேஸ் யுதேசன்

ஆகியோர்களது மறைவு குறித்த

# நினைவுக் கலசம்

**05.09.2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்புருக உறவுகளை அரவணைத்து
பார் போற்றும் பண்பினராய்
பாசத்தின் உறைவிடமாய்
அமைதியின் திரு உருவாய்
வாழ்ந்த எங்கள் குல தெய்வமே
தாய்மையின் மகத்துவத்தை உலகறிய
செய்த எம் மழலைச் செல்வங்களே
மலர்ந்து மணம் வீச வையகம்
வந்த மலர்களே
மணம் வீசுமுன்னே சருகானீர்களே
இறையடி உங்கள் இருப்பிடமென்றாலும்
எங்கள் இதயத்தின் துடிப்பொலி நீங்களே
மாதங்கள் ஆறு கடந்தாலும்
மாறாத உங்கள் நினைவுகளை
காலமெல்லாம் நிலைத்திருக்கும்
இக் கல்வெட்டு நினைவு மலரை
உங்கள் பாதங்களில் சமர்ப்பித்து
வணங்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம் : 19.03.1976
அமரர்
தர்மலிங்கம் தங்கத்துரை



தோற்றம் : 18.06.2011
அமரர்
சுகந்தன் பிரணவி



தோற்றம் : 17.08.2009
அமரர்
தங்கத்துரை சங்கவி



தோற்றம் : 15.09.2009
அமரர்
சுரேஸ் ஹேசிக்ராஜ்



தோற்றம் : 20.01.2012
அமரர்
சுரேஸ் யுதேசன்

## விண்ணில்: *11.03.2018*

## திதி வெண்பா

**சீர் நிறை பனி பொழியும் விளம்பி வருடம்
மாசி மாத அபர பட்ச தசமி திதியில்
எங்கள் குலத்தலைவன் தங்கத்துரையினதும் எங்கள்குல
செல்வங்களும் இறைவனடி சேர்ந்த நாள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## தேவாரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணிநல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணிநல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணிநல் லானோம் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் தருள்புரி யாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிர
என்கண் கள் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகுங் கழற உளறி
உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசைஅன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை
தேன்நக்கு மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

## திருப்புகழ்

உம்பர்தரு தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காக வனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத்தானை முகப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கத்துரை சங்கவி வரலாறு

## மனைவியின் கதறல்...

நல்ல வரம் வேண்டும் என்று
விரதம் இருந்தேன் - நான்
இருந்த விரதம் வீண் போகவில்லை
தீயிலே சுட்டாலும் அதன் தரம்
மாறாத தங்கம் போல்
தங்கத்துரையெனும் நாமத்தோடு
எம் கரம் பிடித்தாய்
இல்லறத்தில் இனிமையாய் வாழ்ந்தோம்
ஈன்றெடுத்தோம் இரண்டு பெண் குஞ்சுகளை
பேச்சிலும் நடத்தையிலும் ஊராரை கவர்ந்தாய்
தன் பிள்ளை போல் மற்ற பிள்ளைகளையும்
பாசத்தோடு கூடி மகிழ்ந்தாய்
இதனைக் கண்டு பொறாமைப்பட்டானோ காலன்
ஐயனுக்கு பொங்கல் இட உறவுகளை
அழைத்துச் சென்றாய் - சின்ன பிஞ்சுகளின்
கெஞ்சலுக் இசைந்து குளத்திலே பூப்பறித்து
ஐயனுக்கு மலர்சார்த்த விருப்பம் கொண்டு
மூத்த மகள் சங்கவியுடன் - பிரணவி, யுதே
கேசி என்ற மருமக்களுடன்
குளத்திலே வள்ளத்தில் சென்றாயோ - நீ
சென்றது குளமில்லை ஐயா! - அது
காலனின் சுருக்கு கயிறென்று யாரறிவார்.
குளத்திலே வள்ளம் கவிழ்ந்ததே
உதவிக்கு உதவ யாரும் வரவில்லையே - அன்று
நான்கு பிள்ளைகளையும் கட்டி அணைத்து
நீங்கள் நின்ற காட்சி கண்முன் நின்றாடுதையா
கும்பிட்ட தெய்வம் - கைவிட்டு விட்டதே
என் செய்வேன் - நான் என் செய்வேன்
கண் உறங்க முடியவில்லை - என்னால்
உணவு உண்ண முடியவில்லை - எத்தனை
நாட்கள், எத்தனை மாதங்கள், எத்தனை வருடங்கள்
கழிந்தாலும் உங்கள் இருவரின் நினைவுகளுடன்
வாழும் என் இதயம்.

மனைவி, தாய்
(த. வசந்தராணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மலிங்கம் தங்கத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாறு

இலங்கை திருநாட்டின் நீலககடல் நடுவே கதிரவன் துயில் கொண்டெழும் கிழக்கு திசையிலே வானுயர் வணக்கஸ்தலங்களுடன் பல்லின மக்கள் வாழும் திருகோணமலையின் வடக்கே கும்புறுபிட்டி எனும் கிராமத்தில் வாழ்ந்த தர்மலிங்கம் - பரமேஸ்வரி என்பவர்களுக்கு 1976/03/19இல் தர்மலிங்கம் - தங்கத்துரை பிறந்தார். இவருக்கு உதயகுமார், கலைவாணி என்று உடன் பிறப்புக்கள் மட்டுமே உள்ளனர். தங்கத்துரை ஆரம்பக் கல்வியை கும்புறுபிட்டி கலவன் பாடசாலையில் கற்றார். இவரின் தந்தை ஒரு விவசாயி மட்டுமல்ல உழவு இயந்திரம் ஓட்டுனர் ஆவார். இதனால் தன் இரு புதல்வர்களுக்கும் உழவு இயந்திரம் இயக்க கற்றுக் கொடுத்தார். அண்மைய நாட்களில் நாட்டின் போர்ச்சூழலின் காரணமாக பல இடங்களிற்கு இவர்கள் குடும்பம் இடம்பெயர்ந்தது. இறுதியில் வன்னி மாவட்டத்தில் பல வருடங்கள் தங்கினார்கள். குடும்ப வறுமை காரணமாக படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு தங்கத்துரை குடும்பச் சுமையை தாங்கினார். கூலிவேலை, மிதிவண்டி வியாபாரம் என்று பலவழிகளிலும் கஷ்டப்பட்டு தனது சகோதரிக்கு இனிதே திருமணமும் முடித்து வைத்தார். நாளடைவில் இந்த வருமானம் போதாமையால் பார ஊர்தி ஓட்டுனர் ஆனார். இதன்பின் நாட்டில் ஏற்பட்ட அமைதிச் சூழலின் காரணமாக தன் ஊர் திரும்பி நிரந்தரமாக வாழ ஆரம்பித்தார். விவசாயம் செய்வதில் அதிக நேரத்தை கழித்ததோடு பாடசாலை மாணவர்களிற்கான பஸ் சேவையினையும் நடார்த்தி வந்தார்.

திருமண வயதை எட்டியதால் தாய் தந்தையரின் விருப்பத்திற்கு ஏற்ப திருகோணமலையில் நிலாவெளி என்னும் இடத்தில் வசிக்கும் மாமாங்கம்- செல்வநாச்சியார் தம்பதிகளின் மகளான வசந்தராணி என்பவரை 2008/06/06ம் திகதி திருமணம் செய்து கொண்டார். அன்று தொட்டு நிலாவெளியில் இனிமையான குடும்ப வாழ்வை ஆரம்பித்தார். இல்லற வாழ்வில் 2009/08/17 அன்று ஒரு பெண்பிள்ளை பிறந்தது. அக்குழந்தைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கவி என்றும் பெயர் சூட்டப்பட்டது. இரண்டாவது பெண் பிள்ளையாகிய யதுர்சானி 2012/12/13 பிறந்தார். மனைவி மீதும் பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர் எல்லோருடனும் எவ்வித பாகுபாடின்றி யாவருடனும் அன்பும் பண்பும் மரியாதையுடனும் நடந்து கொள்வார். 2018/03/11 அன்ற யாரும் அறிந்திருக்கவில்லை இப்படி ஒரு பரிதாபம் நிகழுமென்று பெரியகுளம் ஐயன் கோவிலுக்கு பொங்கலுக்கு உற்றார் உறவினர் பிள்ளைகள், மருமக்கள் எல்லோரும் புடை சூழ சென்றார். மகளும் மருமக்கள் மூவரும் குளத்திலே தாமரை இலை பூ பறிப்போமா என்று கேட்க பக்கத்தில் இருந்த குளத்திலே வள்ளத்தில் மூத்தமகள் மற்றும் மருமக்கள் மூவரும் குளத்திலே பயணமாயினர். அவர்களின் பயணம் இன்று இறுதிப் பயணமாக மாறிவிட்டது. வள்ளம் கவிழ்ந்து போக ஐவரும் மாண்டனர் அக்குளத்தில். மனைவி, இரண்டாவது மகள், உற்றார் உறவினர்கள் மற்றும் மருமக்களின் தாய், தந்தை அவர்களின் உறவுகளின் அழுகுரல் வான்வரை கேட்க முகில் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து கண்ணீர் மழையாக சொரிய அன்னார்களின் (ஐவரின்) உடல்கள் 2018/03/12 அன்று ஒரே கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா அப்பாவின் ஏக்கம்....

மெய்யான உலகத்தில் மிளிரும் அன்பால்
மேன்மை எல்லாம் எமக்களித்தாய்
கொடிய நோய் வாட்டி படுக்கையில் கிடந்த
செய்தி கேட்டால் ஓடோடி வந்து பிணி தீர்ப்பாய் - நீ
வறுமை எம்மை வாட்டிய போது
கல்வி நிறுத்தி விட்டு தந்தையும் தாயுமாக
உருமாறி - சிறுவயதிலே சொல்லெண்ணா சுமைகளை
நீ சுமந்து எம்மைக் காத்தாய் - நல்குடும்பம்
நீ புகுந்து, மழலை செல்வங்களுடன் உன் வாழ்வு
அகமகிழ்வு கண்டவேளை - இடியென
இடித்ததையா அச்செய்தி அன்று - நீயும்
உன் மகளும் மருமக்கள் மூவரின் மரண ஓசை
என் செய்வேன் நான் - அம்மா, ஐயா
என்று நீ அழைத்த குரல் காதினுள் ஒலிக்குதையா
தேம்பி அழ தெம்பில்லை எம் உடம்பில்
ஆறாத துயரோடு மன்றாடுகின்றோம் - இன்று
உங்கள் ஆத்மா சாந்தியடையவென வேண்டி....

**அம்மா, அப்பா**
**அப்பம்மா, அப்பப்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்பிறப்பின் கதறல்

சொல்லித்தந்த அறிவுரைகளை சொந்தமாக்கி
கொண்டோமே அண்ணா - எங்களுக்கு
அண்ணா இல்லை நீ
தாயும் தந்தையுமாகவெல்லோ நீ இருந்தாய்
நாட்டின் போர்ச்சூழலில் கண்ணை இமை
காப்பது போல் எம்மைக் காத்தாயே
தளராத மனத்தோடு உழைப்பால் உயர்ந்த
உன் முகம் எங்கே அண்ணா?
தம்பி, தங்கை என்று அழைத்த - உன்
குரல் எங்கே போனது - நீ
ஏற்கும் காரியம் முடியாமல் - நீ
கண்மூடாயே அண்ணா!
நீ பொங்கல் இட எடுத்த அரிசி
வாய்க்கரிசி ஆகுமென்று யாம் அறியோம் அண்ணா
மலரும் உன் மகளையும், மருமக்கள் மூவரையும்
இரையாக்கிக் கொண்டானே இரக்கமற்ற காலன்
எத்தனை காலங்கள் கடந்தாலும் - நீங்கள்
எங்கள் இதயத்தில் வாழும் தெய்வங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய - நாம்
பிரார்த்திக்கின்றோம் அண்ணா

**- உடன்பிறந்த தம்பி, தங்கை**
**சித்தப்பா, அத்தை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளின் மனக்கலக்கம்...

சூரியனும் உதிக்காத நாளும் உண்டோ? - அப்பா
எனை நீங்கள் அழைக்காத நேரமும் உண்டோ?
கொத்து எங்கே?, கேக் எங்கே? - அப்பா
இனிப்புக்கள் எங்கே எனக்கு?......
ஒரு நாளும் உங்கள் மடியில் இருக்காமல்
விட்டதில்லையே அப்பா- உங்களை
ஒரு நிமிடம் காணாவிட்டால் கண்ணிமைக்க
மாட்டேனே அப்பா - நீங்கள்
வெளியில் செல்லும் போது முத்தமிட்டு
கை காட்டி செல்வீர்களே அப்பா - இன்று
முத்தமிட்ட கன்னம் ஏங்கித் தவிக்கிறதே
உங்களைக் காணாத கண்கள் இமைக்க
மறுக்கிறதே அப்பா - எனக்கு பள்ளி
விடுமுறையில் அப்பம்மா வீடுசெல்ல
யாரப்பா இனி வருவார்கள்?
யதுசா...... யதுசா....... என்று காது குளிர
அழைப்பீர்களே! இனி எப்போது அப்பா
உங்கள் குரலை கேட்பேன் நான்
எனக்கிருந்த ஒரு அக்காவையும் - என்னோடு
விளையாடிய யுதே, கேசி, பிரணவியையும்
எங்கே அப்பா கூட்டிச் சென்றீர்கள்?
என்னையும் அம்மாவையும் தவிக்க விட்டு
நீங்கள் மறைந்த மாயம் என்னப்பா...
உங்களை காணாமல் தினம் தினம்
ஏங்கித்தவிக்கும் உங்கள் அன்பு மகள்.

- மகள்
(கு. யதுர்சானி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் மனத்துயரம்

எல்லோர்க்கும் மாமன் வாய்ப்பதுண்டு - எங்களுக்கு
வாய்த்ததோ மாமன் இல்லை
தாய்க்கு தாயாகவும், தந்தைக்கு தந்தையாகவும்
ஊட்டி வளர்த்த பாசத் தெய்வம் நீ
இடைநடுவே வந்த உறவாயினும் - மாமா
நீர் எமக்கு இறைவன் தந்த வரம்
மாமா என்றழைக்க எத்தனை பேர் இருப்பினும்
நீங்கள் அத்தனையிலும் எமக்கு தனித்துவமே
நாம் கேட்கும் உணவை மனம் கோணாமல்
செய்து தருவீரே மாமா - காரணம்
கடைதனிலே கலப்பணமாம், எம் உடல்
ஆரோக்கியம் பேணி - தினமும் பாசம்
காட்டி வளர்த்த உம் முகம்
எம் விழிகளில் என்றும் அகலா விளக்கு
கை நிறைய திண்பண்டத்தோட எமை அழைத்த - உன்குரல்
இன்று கை தட்டி அழைத்தாலும் கேட்காத தொலைவில்
கிணற்றுத் தவளையாய் இருந்த எம்மை - உம்
ஈருருளி மற்றும் பேரூந்தில் தொலைதூரம் வரை
சுற்றிவரச் செய்தீரே மாமா - இன்று
நிற்கிறதே நடுமுற்றத்தில் உம் வாகனாங்கள்
அசையா சிலைபோல் அசைக்க நீ இல்லாமல்
மகள் - மற்றும் - மருமகள் என்பதற்கு
தமிழ் இலக்கணத்தில் உண்டு வேறுபாடு
ஆனால் உம் மனதில் இரண்டுமே ஒன்றாய்
எமை காத்த காவல் தெய்வம் நீ மாமா
தங்கத்திலும் தரமான உம் இக்குணம் கண்டு
பொறாமை கொண்டானோ காலன் - காலம்
பொறுக்கமுடியாது உம் பாசம் வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் வந்தானே எம்முடன் போட்டிக்கு....
மாமிக்கு துணையாய் எமை இருக்க சொல்லி - உன்
துணைக்கு அழைத்து சென்றாயே எம் செல்ல மச்சாள் சங்கவியை
இடையினிலே சங்கவியின் தனிமை எண்ணி
கூட்டிச் சென்றாயோ எம் தம்பிமார் கேசி, யுதேமையும்
தங்கை பிரணவியையும்.....
மாமா என்ன செய்தார் எமக்கு? என்ற கேள்வி மாறி
மாமா என்ன செய்யவில்லை எங்களுக்கு?
என்று எண்ணுமளவிற்கு ஏங்கவைத்துவிட்டு
சென்றீரே மாமா! - இன்று நீ
இல்லாத இடம் எம்மனதில் என்றுமே
நிரப்ப முடியாத வெற்றிடம் மாமா....
மறு பிறவி கிடைப்பது உண்மையெனில்
இறைவனை வேண்டுகின்றோம் - நாம்
உன்சொந்த மகளாய் பிறப்பதற்கு......

**- மருமக்கள்மார்**

**தாரணி, லக்சி, கவி, நிரோசன், தேனுகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறவா சகோதர சகோதரிகள் புலம்பல்

பாசமலராய் வந்தாயே - வானத்து முழு நிலவாய்
ஒளி தந்தாய் - நீ
உடன் பிறப்பாய் எம்மை எல்லாம்
ஊட்டி வளர்த்தாய்
உதவிக்கு அழைத்தால் ஓடி வருவாய்
அன்பாய் எமை பிணைத்து ஆட்சி செய்தாய்
இன்பமுடன் வாழ்வோம் என இசைந்திருந்தோம்
எம் குழந்தைகளையும் உம் குழந்தை போல்
எள்ளளவும் குறையின்றி வளர்த்தாய்
குழந்தைகளின் பாசத்தோடு குதூகழித்த உன் மனம்
குழந்தைகளோடு மறைந்த மாயம் என்னவோ
இரக்கமற்ற காலன் பாதியிலே உங்களை பறித்தானே
ஏதுமறியா பிஞ்சுகளையும், உன்னையும் பறிகொடுத்த
பாவிகளாக கதறி அழுகின்றோம் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் - உன்
உடன்பிறவா உள்ளங்கள்

**- உடன் பிறவா சகோதர, சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா, மாமியின் நீங்காத துயரம்....

மகளுக்கு நல்ல கணவனாய் வந்தாயே
பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்தாயே
தலைமைக்கோர் எடுத்துக் காட்டாய் நீ இருந்தாய்
அணையா தீபமாய் ஒளிவீச வந்தாய்
உதவியற்ற எங்களுக்கு இனியொரு குறையுமில்லை
என்றிருந்தோமே - அன்று நீ ஐயனுக்கு பொங்கிவிட்டு
பொங்கலுடன் வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றாயே
நீ சொன்ன வார்த்தை இறுதி வார்த்தை என்று யாரறிவார்!
வயதான எங்களுக்கு வாய்க்கு ருசியாய் பொங்கல் வரும்
என்று வழிமேல் விழிவைத்து காத்திருந்தோம்
வந்ததையா செய்தி நீயும், உன் மகளும், மருமக்களும் மூவரும்
மாண்டதென்ற செய்தி - என்ன செய்வோம் நாம்
வந்த அந்த செய்தி பொய்யாக வேண்டுமென்று
வணங்காத தெய்வமில்லை - கை கூப்பி
கும்பிட்ட தெய்வம் கை கழுவி விட்டதே
என்ன விதியிது படைத்தவன் உங்களை
பாதியிலே பறித்தானே ஐயா!
தேம்பி அழ முடியவில்லை, தேகத்தில் தெம்பில்லை
தாளாத் துயர்த்தீயில் தவிக்கின்றோம்.

- மாமா, மாமி
- அம்மப்பா, அம்மம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டியின் பரிதாபம்

எல்லோர்க்கும் அன்பு தரும் எளிய உள்ளம் கொண்டவனே
எது வந்த போதும் ஏற்கும் நெஞ்சம் கொண்டவனே
கொடையிலே கர்ணனை வென்றவனே - எல்லோர்
மனங்களிலும் ராஜாவாய் உலா வந்தவனே
பாட்டிக்குத் துன்பமென்றால் பறந்தோடி வருவாயே
எல்லாமும் நிறைந்தவனாய் எங்களுக்கு நீ வந்தாயே
எப்போதும் மழலைகளுடன் உலா வந்தவனே
பாச மலர்களை மடியிலே சுமந்த உன்னை
பாதியிலே பறித்தானே படைத்தவன்
என் கருமம் முடியுமுன்னே உன் கருமம்
கண்ட பாவியானேனே ஐயா!
என்றும் உன்னை காணாமல் பரிதவிக்கும் என் மனம்.

- பாட்டி
பூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சாள்மார் கதறல்

எப்போதும் புன்னகை பூத்த முகத்துடனும்
மழலைச் செல்வங்களின் சிரிப்புடனும் வலம் வந்தவனே
ஒரு தாய் வயிற்று பிள்ளை போல் - எம்மை
அன்பால் ஆட்சி செய்தவனே
பாசத்தின் சிகரமாய், வற்றாத நீர், ஊற்றாய் நின்றவனே
சுற்றமெல்லாம் போற்றும் சுபாவம் கொண்டவனே
எல்லையில்லா அன்பு, மரியாதை எல்லாம் சொரிந்தவனே
உதவியின்றி வந்தவனே
இறைவனுக்கு மலர்சாத்த எண்ணி மூத்த மகளுடனும்,
மருமக்கள் மூவருடனும் மலர் கொய்த வேளை
பார்த்திருந்த காலன் கதை முடித்து விட்டான்
சிட்டாய் சிறகடித்து வட்டமிட்ட பிஞ்சுகள்
இன்று சிறகுடைந்து போனதுவே
ஆலமரமான நீ இன்று அடியற்ற மரமானாயே
மனம் சோர்ந்து காலமெல்லாம் உமை நினைத்து
அழுவதன்றி வேறென்ன நாம் செய்வோம்.

**- மச்சாள்மார்,**

**பெரியம்மா, சித்திமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மச்சான்மார் புலம்பல்

மச்சான் என்று சொல்ல நா மறுக்குதையா - நாம்
ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரன் போல்
அன்பு கொண்டாயே எம்மீது
ஒரு கூட்டுக் குருவிகளாக கூடிக் குழாவினோமே
தேடியும் எடுக்க முடியா தங்கத்துரையையா நீ
தெய்வக் குணடைய தேவலோக தேவரையா நீ
அடங்கி ஒரு மூலையிலே முடங்கிக் கிடந்ததில்லை
எறும்புபோல் எந்நேரமும் சுறுசுறுப்பாய் இருந்திடுவாய்
மச்சானாய் நீ எமக்கு வாய்த்தது கண்டு - நாம்
உளமகிழ்ந்து பூசித்தோம்.....
மற்றவரின் மனதைப் புண்படுத்தியதே இல்லை நீ
பூமியிலே வாழ்வது வெறும் பொய்யென்று உணர்ந்தோம்
உங்கள் மறைவிற்கு பின் நாம்
கடவுளுக்கு செய்கடன் தீர்க்க மகளுடனும், மருமக்களுடனும்
மலர் கொய்ய போனீரே ஐயா - நீ
துன்பத்தில் சிக்குண்டீர் என்ற செய்தி கேட்டு
ஓடோடி வந்தோமே நாம்
இடைபுகுந்தே காலன் உங்களின் உயிர்குடித்து போனானே
விழிநிறைந்த நீரோடு வெண்தனல் இட்ட புழுவாய்
புரண்டழுகின்றோம் நினைவெல்லாம் உங்கள் நினைவாக
உங்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- **மச்சான்மார்**
**மாமன்மார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரார் புலம்பல்

வீடு தேடி வந்தவரை இன் முகங்கொண்டு வரவழைப்பாய் அன்பிலும் பண்பிலும் எவரெஸ்ட் சிகரம் போல நீ உயர்ந்தாய், சாலையில் செல்வோரிடம் நலம் அறிந்து நீ செல்வாய், பள்ளி மழலைகளின் மனதில் இமய மலையானாய், துட்டணைக்கண்டால் தூர விலகி நிற்பாய் ஆசை மிக்க உறவுகளின் ஆழி ஆனால், அயலவரின் துயர் கண்டால் உடனிருந்து உதவிடுவாய், காணும் இடமெல்லாம் உன் புன்னகை பூத்தமுகமும் எம் கண் முன்னே... நீ வாழ்ந்த காலம் கனவாகி போனாலும் எம் முன்னே எந்நாளும் நீ உயிர் வாழ்கின்றாய், இனிய நினைவுகளையும், இழந்த வலிகளையும், வேதனைகளையும் இறுதி மூச்சு வரை நாம் சுமப்போம்

**உற்றார், உறவினர்**
**ஊரவர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கவி

என் அன்புச் செல்லக்குட்டி சங்கம்மா
உன்னை பத்து மாதம் கருவில் சுமந்து
சந்தோசத்தோடு மூத்த முத்தை சுமந்து பெற்றெடுத்தேன்

உன் அழகை ரசித்தேன்
நீ கனிவாக சிரித்திட, இனிமையான வார்த்தை
பேசிட அன்பாக பழகிட உன்
செல்லக்குறும்பையும் சுட்டித் தனத்தையும்
பார்த்த அம்மம்மா, அப்பப்பா, சித்தா, அத்தை, மாமா
நிரோஷன், தேனிக்குட்டி, பாட்டி, தாத்தா
பூட்டி கண்டு களித்தனர்.

ஞாயிறு உதயத்தில் இவ்வளவு ஆனந்தத்துடன்
ஐயனாருக்கு பொங்கல் பொங்குவதற்கு சென்றோம்
பலாப்பழம் பறித்து அடிபட்டு சாப்பிட்டியே
அங்கு கொடிய அரக்கன் படகில் ஒழிந்திருந்து
உன் உயிரை பறித்து விட்டானே.

குளக்கரையில் விளையாடிவிட்டு வந்திருக்கலாம்
அம்மா! என் பட்டுப் பூச்சி ஏன் அம்மா
குளத்தில் இறங்கினாய் அந்தகுளம் உனது
உயிரை பறிக்கும் என்று தெரியாமல்
போனதாம்மா.

என் மூத்த முத்தே, உன் தங்கையை விட்டுச்செல்ல
எப்படியம்மா மனம் வந்தது
இந்த அம்மாவுக்கு கூட சொல்லாமல்
போனது ஏனம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னோடு விளையாட உன் நண்பர்கள் மட்டும்
அன்றி மச்சான் மச்சாள் என்று மூன்று
பேரையும் அழைத்துச் சென்றாயே
உங்களுக்கு பாதுகாப்புக்காகவா அப்பாவையும்
அழைத்துச் சென்றாய்.

இந்த அம்மாவையும் தங்கையையும் இரவு பகல்
முழுவதும் கண்ணீர் வடித்து, நாள் முழுவதும்
வெந்து சாகின்றோம்.

அத்தை வீட்டு முத்தம் மாலை நேரம் கலகலப்பும்
சிரிப்பும் இருந்ததே யார் கண் பட்டதாலோ
ஐவரையும் இழந்து விட்டோம்
அன்புச் செல்லம் நீ இல்லாத படியால்
வீடு இருள் சூழ்ந்தது என் தங்கமே
உன் உடலை மட்டும் தான் என்னிடமிருந்து
பிரித்தார்கள் ஆனால் உன் உயிர்
என் உடலில் இருக்குதம்மா.

எப்போது என்னிடம் ஓடி வருவாய் என்று
ஏங்கிக் கொண்டிருக்கிறேன்
அதிகாலையில் உன் வரவை எதிர்பார்த்த
வண்ணம் இருக்கிறேன்
என் செல்லக்குட்டி சங்கம்மா!
உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்.

**உன்பிரியமான**
**அம்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவெளி தந்த நிலா முகம்

கனவோடு காவியமானவளே
நினைவோடு ஓவியமானவளே
நித்தம் நித்தம் அலைமோதும் - உள்ளங்கள்
அணைபோடத் தெரியாமல் - சொந்தங்கள்

பூசைக்கு பூ பறிக்கச் சென்ற நீ
பூ எது பூ முகம் ஏதெனத் தெரியாமல்
பறித்து விட்டான் காலன்
நிலாவெளி தந்த நிலா முகத்தை....

செய்தி கேட்டு செய்வது அறியாமல்
தெரியாமல் நிலை தடுமாறினோம்
நிலை கொள்ளாமல் திசை எல்லாம்
தேடினோம் தேடலில் கிடைத்தது
உன் பூ உடல் தான்.

காலைநேரம் சாலையோரம் - நீ
கனத்த புத்தகப் பையோடு
காத்திருந்தாய் அத்தையுடன் அன்று

தரித்த பேரூந்தில் - நீ
பொற்பாதம் பதித்து ஏறி வருகையில்
இதழ்விரிந்த சிவப்பு ரோஜா - கையில்
இதழ்விரிந்த வணக்கம்

வந்த திசை பார்க்கும் போது
எங்கள் மனதில் சஞ்சலம்
பூ எது பூ முகம் எது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமாறும் போது உனது
புன் சிரிப்பால் புரிந்து கொள்வோம்
சஞ்சலம் இல்லாத சங்கவியை

முகில் தொடும் மலை வெளியும்
நிலா வீசும் நிலா வெளியும்
களை இழந்த போது
கனத்த இதயங்கள் - உன்
ஆத்மா சாந்தி அடைய - இன்று
ஆண்டவனைக் கேட்கின்றோம்.

வானத்து நட்சத்திரங்கள் இடையே
ஒளி வீசும் உன் முகம் பார்த்து
பரிதவிக்கும் நாங்கள் நித்தம்
உன் நினைவுகளுடன்............

அதிபர், ஆசிரியர்கள்
உன் பள்ளித் தோழர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகடித்து பறந்த சிட்டுக்குருவியே....

சலனம் எதுமில்லா
வதனத்துடன்
பள்ளியை வலம் வந்த
சிட்டுக்குருவியே......

முதல்பேரூந்தில் புத்தகப்பையோடு
தட்டித்தடுமாறி நடைபோட்டு
எம்மை கண்டவுடன் முகம் மலரும்
முழு நிலவே....

உன் அன்ன நடையும்,
அன்பான பேச்சும்
நீ எம்மை அழைக்கும் தொனியும்
எப்படி மறப்போமம்மா....

ஒளிவிழா நடனத்திற்கு
ஓடி வந்து சேர்ந்து
சின்ன சின்ன பாலாவிற்கு
அசைந்தாடியவளே....

சாமிக்கு பொங்கல் வைக்க
பூப்பறிக்கச் சென்ற பூவே உன்னை
காலன் உடன் வந்து
பறித்துச் சென்றானோ....

நீ மறைந்தாலும்
உன் நினைவுகள் - என்றும்
எம்மனதில் மறையாது
நிலைத்திருக்குமம்மா....

**ஆசிரியர்**
**(திருமதி. ரஞ்ஜினிதேவி விஜயானந்தம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகள் முன்பள்ளி மற்றும் திருமுருகன் அறநெறிப்பாடசாலையின்

# கண்ணீர் கவிதைத் துளிகள்....

பட்டாம் பூச்சிகளாய் சிறகடித்து - திருமகள் முன்பள்ளியில்
காலடி எடுத்து வைத்தவர்கள் நீங்கள் தானே
அம்மா கரம்பிடித்து அ என்னும் எழுத்து எழுத முன்பே
ஆசான் கரம்பிடித்து அ எழுதியவர்கள் நீங்கள் தானே.

நண்பர்களுடனும் சகோதரமாய் பழகும்
பண்பு கொண்டவர்கள் நீங்கள்தானே
முன்பள்ளியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளிலும்
முன்வந்து கலந்து கொண்டீர்களே.

ஐந்து வயது இறுதியில் பாடசாலைக்காக செல்லும் ஆர்வத்துடன்
கலை நிகழ்வுகளில் கலந்து கொண்டு பரிசுகளை பெற்றீர்களே
முன்பள்ளியில் எம்முடன் பழகும் தொடர்பு முடிந்து விடாமல்
அறநெறி மூலம் எம்முடன் உறவு வைத்தீர்களே.

அன்று நீ அறநெறி வந்திருந்தால் - இன்று உன்னை
இழந்திருக்க மாட்டோம் என்று ஏங்குகின்றோம் நாங்களம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளை பிரார்த்திக்கின்றோம் நாம்.

**ஆசிரியை, பிள்ளைகள்**
**மற்றும் பெற்றோர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேசிக்ராஜ், யுதேசன், பிரணவி

எங்கள் மழலைச் செல்வங்களே!
ஈரைந்து மாதங்கள் கருவில் சுமந்து
எத்தனை துன்பங்கள் எல்லாவற்றையும் தாங்கி

உங்கள் அழகை ரசித்தோம் நீங்கள் கனிவாக சிரித்திட
இனிய வார்த்தைகள் பேசிட அன்பாக பழகிடவே
உங்கள் செல்லக்குறும்புகளையும் சுட்டித்தனத்தையும்
நாம் கண்டு பூரிப்பு அடைந்தோம்.

ஞாயிறு உதயத்தில் எவ்வளவு ஆனந்தத்துடன்
ஐயனாருக்கு பொங்கல் பொங்குவதற்கு சென்றீர்கள்
அந்த கெட்ட அரக்கன் படகினில் ஒழிந்திருந்து
உங்கள் உயிர்களை பறிந்து விட்டானே....

பச்சிளம் பாலகர்கள் நீங்கள் கனிந்து பேசும்
இனிய வார்த்தைகள் கேட்டும் கதறி அழும் சத்தம் கேட்டும்
காலன் அவன் உங்களை துடிக்க துடிக்க கௌவிக்
கொண்டு சென்று விட்டானே...

குளம், கரை விளையாட்டை விரும்பி விளையாடுவீர்களே
அந்தக் குளமே உங்களை பலி எடுத்து விட்டதே...
எங்கள் மூத்தமகனே ஹேசிக்குட்டி நீ தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்ததைக்
கண்டு என்னால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே.....

எங்கள் முதல்கண்ட முத்தே ஹேசிக்குட்டி
உந்தன் செல்லக்கதையினால் கல் நெஞ்சத்தையும் கரைய வைப்பாயே...
எங்கள் குடும்பத்தில் மூத்தபிள்ளையும் பொறுப்புள்ள மகனும்
இரண்டு தம்பிக்கும் பாசமுள்ள அண்ணாவும் நீயே
தம்பிமாரை பிரிந்து இருக்கமாட்டியே எப்படி உனக்கு பிரியமனம் வந்தது.
உன் அப்பம்மாவிற்கு வெள்ளைமுடி வந்துவிட்டதே
மரணித்து விடுவார் என்று எண்ணி மரணித்து விடகூடாது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிடம் மன்றாடினாயே.... உன் கருமையான தலைமுடிகளையும் இரக்ககுணத்தையும் பாத்துமா உன் உயிரை பறித்துவிட்டான்.
எங்கள் சின்ன மகனே யுதேக்குட்டி.....
தலப்பிள்ளையைத்தான் பலி எடுக்கும் என்பார்கள் நீ எங்கள் சின்னமகன்தானே
ஏன் உன்னை அந்தப் பெரியகுளம் பலி எடுத்தது
உன் உடன்பிறந்த அண்ணா (ஹேசி) உடன்பிறவா அக்கா (ஜது)
உரித்தான மச்சாள் (சங்கவி) பாசமிகு மாமா அவர்களை பிரிந்துவர மனம் இல்லாமலா உடன் சென்று விட்டாய்....
உந்தன் பாசம் நிறைந்த தம்பியை யாரிடமும் கொடுக்கவிடமாட்டியே தம்பியை விட்டுப்பிரிய எப்படி உனக்கு மனம் வந்தது.

எங்கள் வீடு எவ்வளவு கலகலப்புடன் இருந்தது யார் கண் பட்டதோ....
நீங்கள் இல்லாத வீடு இருட்டறை ஆகி விட்டது.
நீங்கள் நடந்து உலாவிய பாதைகள் பாலைவனம் ஆகிவிட்டது.
உங்கள் உடல் மட்டும்தான் எங்களை விட்டு பிரிந்து சென்றுள்ளது
எங்கள் உள்ளங்களில் இருந்து உங்களை பிரிக்கமுடியாது.

நீங்கள்தான் எங்கள் பொக்கிஷம்
காசு, பொருள் இல்லாமல் இருந்திடலாம்
பெற்ற பிள்ளைகள் உங்களை இழந்து எங்களால் இருக்கமுடியவில்லை
எங்கள் கைகளுக்குள் பொத்தி, பொத்தி வளர்த்தோம் எங்கள் கைகளைவிட்டு பிரிந்து சென்றதேனோ... பெற்றோர் நாமிருக்க பிள்ளைகளை பறித்து விட்டானே.. எங்கள் கண்ணீரை துடைக்க ஒருவராவது இருந்திருக்கலாம் தானே...

ஒவ்வொரு விடியலும் உங்களை பார்க்க கண்விழிப்போம்
இப்போதெல்லாம் ஏன் விடிகின்றது என்று கேள்வியாக இருக்கின்றது. இவ்வுலகில் நாங்கள் நடைபிணமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நீங்கள் விண்ணுலகம் சென்றதை எங்களால் நம்பமுடியவில்லை. நீங்கள் எங்கோ சென்றுள்ளீர்கள் திரும்பிவருவீர்கள் என்ற எதிர்பார்ப்போடு கார்த்திருக்கின்றோம்
எங்கள் குடும்பத்தில் நீங்கள் மீண்டும் வந்துபிறக்க வேண்டும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் வாழ்க்கை

மரணம் என்பது எல்லா மனிதனுக்கும் உரிமையானது. இவ்வுலகில் பிறந்த யாவருக்கும் இது வாழ்வில் காண்பது சாத்தியம் எப்படி நாம் வாழ்ந்தோமோ அப்படித்தான் நாம் மரணத்திலும் முடிவடைவோம். கிறீஸ்தவர்களாகிய எமக்கு மரணம் முடிவல்ல அது ஒரு புது வாழ்வது. ஒரு கதவின் வழியாக உலகத்திற்கு வந்து மறு கதவின் வழியாக அதாவது மரணத்தின் வழியாக நாம் புதுவாழ்வை அடைகிறோம். அதாவது இறைவனை தரிசிக்க செல்கிறோம். இதற்கு காரணம் நாம் விசவாசிக்கும் கடவுளின் மகளாகிய யேசு கிறீஸ்து சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். கிறீஸ்தவர்களாகிய நாம் இதை விசுவாசிக்கிறோம் நம்புகிறோம். சாவை வென்ற இரட்சகர் எம்மை சாவினின்றும், பாவத்தினின்றும் மீட்டார் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே மரணத்தை நல்ல முறையில் ஏற்க நாம் நல் வாழ்வு வாழ வேண்டும். குடும்பத்திலே, சமுதாயத்திலே உலகிலே நல்வாழ்வு வாழவேண்டும். அது நம்மை நல் மரணத்துக்கு இட்டுச் செல்லும்.

கடந்த நாட்களில் நடந்த மரணத்தைப் பற்றி சொல்வோமானால் இறைவன் முன்னிலையில் தேவ தூதர்களாக இருக்கும் குழந்தைகள், உலகத்தைவிட்டு கடவுளிடம் போய்விட்டார்கள் தந்தையானவர் எல்லோருக்கும் நன்மை செய்து நல்லவராக வாழ்ந்து வந்தார் என்று சொல்வது அவருடைய வாழ்வு காலம் அவ்வளவு தான், நல்லவர்கள் கூடிய காலம் வாழ மாட்டார்கள் என்று நாம் சொல்வது உண்டு ஆகவே அவர் ஆண்டவரால் எடுக்கப்பட்டு விட்டார். ஏனென்றால் அவரை இறைவன் மரணத்தின் மூலம் எடுத்து கொண்டார். நாம் கவலைப்படுவது மனித சுவாபம் அல்லது மனிதனின் நிலை, மனிதனின் உணர்வு என்று தான் சொல்ல முடியும், மனதிற்கு கவலையாக இருந்தாலும் அவருடைய ஆன்மாவிற்கு சிறந்ததாகும் ஏனென்றால் மனித ஆன்மா இறைவனை சந்தித்து இறைவனோடு இணைந்து விட்டது இதுதான் வாழ்க்கையின் முடிவு.

**- அன்பின் சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தா அம்மம்மாவின் தவிப்பு

குழந்தை என்பதாலோ
அந்த தேவன் எடுத்து கொள்ள
ஆசைப்பட்டானோ....

கருவில் தரித்த முதல்
தொட்டு ரசித்துக் கருணை பொழிந்து
பல கனவுகளுடனும், எண்ணங்களுடனும்
எண்ணில் அடங்காத அசைகளுடனும்

தாயவள் வளர்க்க.....
தந்தையவன் சீராட்ட....
எதுவும் வேண்டாம், இவன் சிரிப்புக்கு....
இப்படி இருக்கும் இவர்களை
உன்னிடம் எடுத்துச் செல்ல
எப்படி மனம் வந்தது இறைவா...
எல்லாம் இழந்தால் பெற்றுக் கொள்ள முடியும்
என்பது நம்பிக்கை......
பெற்றோர்கள் இருக்கும் போது
பெற்ற பிள்ளையை எடுத்துக் கொண்டால்
பிறந்த பிறவியில் அர்த்தம் உண்டோ....

வாழ்ந்து களித்தவர்கள் வரிசையில் நிற்க
வாழ வேண்டிய இளம் பூ மொட்டுக்களை
பறித்தது பாவமல்லவா....
இப்படி இடையில் உயிரை எடுப்பதற்கு
இவர்களை இந்த உலகத்திற்கு அனுப்பாமலேயே
இருந்திருக்கலாமே ஐயனே.....
இறைவனை ஒவ்வொரு மனிதனின் இறுதி நம்பிக்கை
நீ தான் - ஆனால் இன்று
இறைவன் இருப்பதே எமக்கு சந்தேகம்
ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கிறேன்
கடவுளே கல்லாக இருக்காதே

தாத்தா, அம்மம்மா
(குடும்பத்தினர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரால் கரைகின்றேன்

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அழாவிய கால்களும் எங்கே?
எம் உயிரில் எழுதிய கவிதைகளே நீங்கள் எங்கே?

நாட்கள் வேகமாக கடந்து போகின்றதே
நீங்கள் எம்மைவிட்டுச் சென்ற சோகம் இன்னும் முடியலையே
உம்மை இழந்து தவிக்கும் என் அக்கா அத்தானை பாரீரோ
நீங்கள் வாழ்ந்து குடில் பார்த்து ஏங்கி அழும் கண்களை பாரீரோ
யாருக்கும் யார் ஆறுதல் கூற எங்கே போய் நிம்மதி தேட

நிழலும் போனதே நிஜமும் போனதே
நினைவுகள் மட்டும் ஒவ்வொரு நொடியும்
எம்மை வாட்டுகின்றதே
கருணை இல்லா கடவுளே
எம் கண்கள் இரண்டையும் பறித்து
எம்மை வாழ்நாள் குருடனாக்கி விட்டாயே.

தெய்வம் இல்லை என்னும் போது கோயில் எதற்கு
நீங்கள் இல்லை என்றபோது வாழ்க்கை எதற்கு
எம்மை நடைப்பிணமாக அலையவிட்டு
நீங்கள் இருவரும் எங்க விரைந்து சென்றீரோ

எதற்கும் கேள்வி கேட்கும் உங்களது குறும்பு பேச்சினையும்
எல்லோரையும் மயக்கும் கேலிச் சிரிப்பினையும்
எல்லோருடனும் பழகும் உங்கள் நல்லகுணத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி எந்த உலகத்தில் தேடிப்பார்ப்போமோ?
இருக்கும் இடத்தையே கலகலப்பாக்கி
மகிழ்ச்சியால் நிறைத்திடும் என் மருமகன்களே
ஹேசி என்றும் யுதே என்றும் அழைத்தால் வருவீர்களே?
நீங்கள் சோகத்தில் எம்மை தவிக்கவிட்டு
நீங்கள் எங்கே சென்றீர்களோ?

சிறிய எறும்புக்கு கூட தீங்கு நினைக்காத
நல்ல உள்ளம் கொண்ட உங்களின் உயிரை
துடிக்க துடிக்க பறித்துச் சென்ற அந்த காலனுக்கு
துளி கூட இரக்கமில்லையா?

அறிவில் சிறந்த புத்திசாலி மருமகன்களே
நீங்கள் எதிர்காலத்தில் இஞ்சினியராகவோ, வைத்தியராகவோ
நல்ல நிலைக்கு வருவீர்கள் என நண்பர்களுடன் கூறி
சந்தோசப்பட்ட எம் எண்ணத்தையும், எதிர்பார்ப்பினையும்
பொய்யாக்கி உங்கள் எதிர்காலத்தையே
எமன் பறித்து விட்டானே.

விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்
அதுபோல நீங்கள் இருவரும் மீண்டும் வந்து
பிறந்திடுங்கள் நம் துயர் தீர்த்திடவே!

**உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்**
**மாமன்மார்**
**பெரியப்பா, பெரியம்மா**
**சித்தப்பா, சித்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனத்த மனதுடன் திருகோணமலை
# புனித சூசையப்பர் கல்லூரிக் குடும்பம்

பத்து மாதம் சுமந்துபெற்ற அன்னை மனம் பரிதவிக்க
பாசமுடன் அரவணைத்து வளர்த்த தந்தை துடிதுடிக்க
கூடப்பிறந்த உறவினரும் பதைபதைக்க - பள்ளிச்
சிறார்களும் பாதைதனில் காத்திருக்க - காலனவன்
கவர்ந்து சென்றதேனோ? - பிஞ்சுக் குழந்தைகளை

படிப்பினிலே உயர்ச்சிபெற்று பார்புகழ் வாழ்வாயென்றா
காலனவன் பாதியினில் இழுத்தெடுத்தான் - கதறுகின்றோம்
கண்மணிகளே! உம் பிரிவுத்துயர் தாங்கொணாமல்
காலமெல்லாம் உம் நினைவுகளுடன் வாழுகின்றோம்
கனத்த மனத்துடன்!!!

"இவர்களின் குடும்பத்தை இறைவன் ஆசீர்வதிப்பாராக"

**அதிபர்,**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்,**
**தி/ புனித சூசையர் கல்லூரி**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறியின் முத்துக்களே

சின்னஞ் சிறு பாலகர்களாய்
பெற்றோர் அரவணைப்போடு
அவர்கள் கை பிடித்து பக்கவமாய்
அழைத்து வர மகிழ்வோடு
அறநெறிப் பாடசாலையினுள்
நுழைந்த முத்துக்களே.

ஹேசிக், யுதே, ஐது எனும்
செல்வப் பெயரோடு
ஒற்றுமையின் இலக்கணமாய்
எங்கள் பள்ளியில் நீங்கள்
குறும்பாக இருந்தாலும் எங்களுக்கு
நீங்கள் அரும்புகழ்.

ஒவ்வொரு ஞாயிறும் தொடர்ந்து
வருவீர்களே உற்சாகத்துடன்
ஒரு கிழமை வரமுடியாவிட்டால்
முதல் நாளே காரணத்தை சொல்லுவீர்களே
பட்டுப் பாவாடையுடனும் வேட்டி சால்வையுடனும்
வரும் வழகே தனி அழகு.

கடவுளே வழிபடச் சென்ற பிஞ்சுகளை
பறித்துக் கொண்டானா? எடுத்துக் கொண்டானா?
இல்லையேல் அவர்களுக்கு முத்தியைக்
கொடுத்துவிட்டானா?
ஒருவரையாவது விட்டு வைக்காமல் காலன்
மூவரையும் அழைத்துச் சென்றுவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் முத்துக்களின் பிரிவைக் கண்டு
மனம் ஆறாத் துயரில் வாடுகின்றது
இதனை விபத்து என்றெண்ணுவதா? - இல்லை
விதியின் செயலா?
எதுவாக இருப்பின் மும்முத்துக்களும்
மீண்டு வரப்போவதில்லை.

பேச்சுக்களாலும் சிரிப்புக்களாலும் எம்மை
உம் பக்கம் சாய்த்துவிடுவீர்களே
வகுப்பறை முழுதும் உங்கள் விம்பங்களே
தினம் தினம் எம் கண்களில்
நீங்கள் இல்லாவிட்டாலும் இன்னும்
உம் நினைவுகளோடு பயணிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய மனதார பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீசித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்,**
**பெற்றோர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள் மாமாமார், சித்தி

எங்கள் சின்னகுட்டி
தேவதைக்கு எங்களின்
அன்பு நினைவுகள்.....

எங்களின் சின்ன மகளே - உன்
கள்ளம் இல்லா புன் சிரிப்பும்
முத்தான உன் வண்ண பேச்சையும்
கேட்க எம் மனம் துடிக்கிறதே எங்கே நீ

உனை நினைத்து கண் கலங்காத
நேரம் இல்லையம்மா
ஒரு முறையாவது கனவில் வந்து
புன்னகைக்க மாட்டாயா என
ஏங்குகிறோம்....

உன் பிஞ்சு நெஞ்சில் எத்தனையோ
கனவுகளை எண்ணி சுமந்திருப்பாய்
அந்த கனவுகூட கரைந்து
போனதேம்மா...

என் தோழர்கள் விளையாடும்
இடத்தின் உன் பிஞ்சுப்பாதங்களும்
துள்ளி தியாதா என்று
எண்ணி எம் மனம் தவிக்கின்றதே....

அன்று நீ உதிரும் போது
எதை எதை எண்ணி ஏங்கி
துடித்தாய்யோ என்று எண்ணி நினைத்து
தினமும் மெழுகாய் உருகுகின்றோம்மம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதம் பயின்று பட்டம் பெறுவாய்
என்று நினைத்தோமே -அந்த
பரம சிவனும் கண்ணை மூடிக் கொண்டாரே....

நீ மடிந்து போவாய் என்று
தெரிந்து இருந்தால் கடவுளிடம்
மண்டியிட்டு கேட்டு இருப்பேன்
மீண்டும் மலரச் செய்வாயா என்று

**என்றும் நீங்காத உன்**
**நினைவுகளுடன் மாமாமார்**
**சித்தி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா, அம்மாவின் குமுறல்

பத்து மாசம் சுமந்து பெற்றெடுத்த
எங்களின் அன்பு தேவதைக்கு
எங்களின் நீங்காத நினைவுத் துளிகள்....

வாய் போசாத எங்களுக்கு முதல்
வாரிசாக பிறந்து வாய் திறந்து
எம்மை அப்பா அம்மா என கூக்குரல்
இட்ட எங்கள் அன்பு தேவதை எங்கே...

எதையும் சொல்லி அழ தெரியாத
எங்களை தினமும் கண்ணீர்
சிந்த விட்டுப் போனது ஏனம்மா...

சிட்டுக் குருவிபோல் பறந்து
திரிந்து கிளி போல் பேசி
எங்களை மனம் நெகிழ செய்தாயே...
உன் பேச்சை எப்போது கேட் போம்மம்மா.

இந்த சிறுவயதில் உன்
சிறகுகள் உடைந்தது ஏனம்மா
எங்களை வாய் பேசாமல் செய்தும்
உன்னை போச வைத்த கடவுளுக்கு
தெரியாதா நீதான் எங்களின் தாய் என்று.

உன் சிரித்த முகத்தைப் பார்த்து
பொறுக்க முடியாமலா - அந்த
கடவுள் உன்னை காவு கொண்டா
னோ தெரியவில்லை.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் வாசலில் நின்று பார்க்கின்றோம்
நீ முற்றத்தில் விளையாடிக் கொண்டு
இருக்க மாட்டாயா என எண்ணி...

காணவில்லை என்று தேடினோம்
நீ கடவுளிடம் சென்றது தெரியாமல்

மறு பிறவியாக மலர்ந்து எம்
மண்ணை முத்தம் இடமாட்டாயா
என எண்ணி ஏங்குகின்றோம்

உன்னை நினைத்து ஏங்கி
தவிக்கும் உன் அன்பு அப்பா, அம்மா
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோமம்மா....

**உன் நினைவால் ஏங்கி**
**தவிக்கும் அப்பா அம்மா.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மங்காத மழலைச் செல்வம் பிரணவி

எம் பாடசாலை தோட்டத்து மல்லிகை நீயம்மா!
மகரந்தச்சோலையின் புள்ளி மான் நீயம்மா!
பால் வடியும் வட்டநிலா உந்தன் வதனமம்மா!
முத்துக்குளியல் அது உன் புன்னகையம்மா!
வாழ்க்கையை வாசிக்க எண்ணி!
எம் கல்விச்சாலையில் தடம் பதித்தாய்!
தொடர் புள்ளியாய் நீ பல சாதிப்பாய்
என நாம் நினைத்த வேளையில்
முதலாம் புள்ளியிலே முற்றுப்புள்ளியானாயம்மா!
இடிந்து போன மனக்கோட்டைக்குள்
எதிர்பார்ப்புகளை தொலைத்து விட்டோமம்மா!
வாழ்வு! ஒரு சந்தர்ப்பம் தான் என
புரிய வைத்த என் செல்வமே!
மனிதத்தையும் புனிதத்தையும் சுமந்து
பூமியில் புதைந்து போனாயம்மா!
விலை மதிப்பில்லாத உன் வாழ்வு
கண்ணிமைக்க முன் கருகிப்போனதம்மா!
அன்பை சுமந்த இதயங்கள் அழுகின்றதம்மா!
அகக்கண் திறந்து எமை ஒரு கணம் பாரம்மா!
உன் நிரந்தர பிரிவினால் நித்தமும் நினைவிழந்து
ஒருதரம் வருவாய் எனப் புலம்புகின்றோம் எம் கண்மணியே
உன் மரணத்தை ஜீரணிக்க முடியில்லை
ஏற்க முடியாமல் ஏங்கி தவிக்கின்றோமம்மா!
உன் பிரிவால் நெஞ்சம் தீயாய் சுடுதம்மா!
துரயத்தை சுமந்தபடி மீண்டும் மீண்டும் உன் நினைவுகள்!
முள்ளாய் குத்துதம்மா! ஞாயிறு நடந்த அந்த கணத்தாக்கினால்
கனத்த இதயங்களின் வலியை நாம் எத்தனை நாள் சுமப்பதம்மா!
உன்னை எண்ணும் போதெல்லாம் வார்த்தை வரவில்லையம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிகளில் கண்ணீரே வருகின்றது எம் செல்வமே!
வெள்ளிக்கிழமைகளில் கண்ணை மூடி எம் கல்விக்கூடத்தில்
சிவபுராணம் பாடும் உன் அழகுக்கு ஈடு இணை ஏதம்மா!
படைத்தவனுக்கு என்ன பாரபட்சமோ!
பறித்து விட்டான் உன் உயிரை பாதியிலே!
உன் பிரிவு ரணமாய் வலிக்கின்றதம்மா!
எந்த விசயத்தையும் எம் ஆசிரியர்களுடன்
மறைத்து வைக்காத நீ!
எங்களை விட்டு பிரியப்போகிறாய் என்பதை மட்டும்
ஏன் சொல்ல மறந்தாய் தங்கமே! மீண்டும் இவ்வுலகில்
உதிப்பாய் எனும் நம்பிக்கையில் என் கண்ணீர்த்துளிகளை
காணிக்கையாக்குகின்றேன்! உன் ஆத்மா சாந்தியடைவதற்காக!

திரு. க.முரளிதரன்
அதிபர்
நிலாவெளி றோ.க.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பம்மா

* கிழக்கின் விடிவெள்ளியாய் புறப்பட்ட உங்கள் உதயம்
* எங்கள் இதயவானில் போட்ட கோலங்கள் ஆயிரம்!
* பிஞ்சுமொழி பேசி கொஞ்சுமொழி வார்த்தைகள் கூறி
* ஒரு கூட்டுப்பறவைகளாய் உலா வந்தீர்களே!
* இனி உங்கள் அன்பு மொழி எங்கே? ஆசை ஆசையான வார்த்தைகள் எங்கே?
* கேட்க எமக்கு கொடுத்து வைக்கவில்லையே!
* பாரினில் எம்முடன் பண்புடனே பழகிவிட்டு நீங்கள் நீடுதுயில் கொண்ட
* சோகத்தை மறக்க மட்டும் சொல்லித்தரவில்லையே எம் செல்வங்களே
* எதற்கும் ஒரு முடிவுண்டு! நீங்கள் முடிவில்லாமல் முடிந்து விட்டீர்களே!
* இவ்வளவு நாளும் உங்களை நாங்கள் கண்களுக்குள் தான் வைத்திருந்தோம்
* அதையும் தாண்டி எங்கள் இதயங்களுக்குள் அடக்கமானீர்களே!
* சுவர்க்கம் உங்களை வைத்து மகிழ்வதை எங்கள் இதயங்கள் உணர்கிறது.
* ஆனால் கண்ணீருக்குத்தான் அது புரியவில்லை!
* கசப்பான ஞாபக தீயே! உனக்குள்ளிருந்துதான் தூய உதயத்தை எதிர்பாக்கின்றேன்
* உங்கள் இறப்பே பிறப்பாக பார்க்கின்றோம் எம்குழந்தைகளே!
* இந்தப்பிஞ்சுக்குழந்தைகளின் பிரிவை சுட்டிக்காட்ட உனக்கு உள்ளம் வந்ததோ!
* நீங்கள் தெவிட்டாத கனிகள் காலத்துக்குத்தான் பசி எடுத்து விட்டது
* மனத்திரையை இருளாக்கி வானுலகம் ஏன் சென்றீர்கள்!
* தொடரமுடியாத தொலைவை நோக்கி எமைவிட்டு ஏன் பிரிந்தீர்கள்!
* காற்றில் கலந்துவிட்ட எமது அன்புச்செல்வங்களே!
* ஞாயிறின் காலை உதயம்! எவ்வளவு மகிழ்ச்சியுடன் ஆலயம் சென்றீர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சந்தோசக்களிப்பில் தாமரை இலைகள் பறித்தீர்கள்!
* இரக்கமற்ற அரக்க குண இயமன் உங்கள் உயிர்களை மறைந்திருந்து பறித்தானே!
* இவ்வுலகில் நாம் இருக்கும் வரை உங்கள் பெயர்கள் உச்சரிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கும்.
* உங்கள் அன்பை எல்லூர்க்கும் வாரி வழங்கியதால்
* நீங்கள் உலகம் உள்ளவரை உயிர் வாழ்வீர்கள் என் செல்வங்களே!
* நீங்கள் இல்லை என்பதை இதயம் ஏற்க மறுக்கிறது!
* உள்ளத்தின் வயிறு வேதனைகளால் தான் இன்று நிரப்பப்படுகின்றது
* எங்கள் இமை உதடுகளை பிரித்து வந்த வழியாக இதயவறையில் வந்துபோகும்.
* இப்போதும் பார்க்கிறோம்! என்றென்றும்! சுவாசிக்கின்றோம்!
* வாழ்ந்திடும் காலம் எல்லாம் மறப்போமா? உங்கள் முகத்தை!
* மற்றாடுகிறோம் இறைவனை! உங்கள் ஆத்ம சாந்திக்கு
* உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் உங்கள் பிரிவுத்துயரால் வாடும்

**அப்பம்மா**
**யோகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள்
## இ. திவாகரன், இ. தனுசியா, இ. ஷர்மிலன் புலம்பல்

எங்கே போனீர்கள்
எங்கள் குடும்ப
ஆணிவேர்களே
நீங்கள் போன
செய்தியறிந்து
நாங்கள்
மதியற்று விட்டோம்!

விதியென்பதா
தலைவிதி யென்பதா
யார்செய்த சதி
மதி கெட்ட கடவுளே
ஏன் இந்த துயரம்.....?

ஒன்றோ இரண்டா
ஐந்து பேரை பறித்து
எம் ஊரையே
நிர்க்கதியாக்கி விட்டாய்?

ஏய் காலனே
உயிர்களை
பறித்து விட்டாய்
எம் உணர்வுகளில்

கலந்து விட்ட
உறவுகளின்
நினைவுகளை
பறிக்க முடியாது.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பில் உதிர்ந்த மலர்
# தங்கத்துரை சங்கவி
## (கும்புறுப்பிட்டி மெ. மி. த. க. பாடசாலை)

கிழக்கின் விடிவெள்ளியாய் புறப்பட்ட உன் உதயம் எங்கள் இதய வானில் போட்ட கோலங்கள் ஆயிரம் பிஞ்சு மொழி பேசி கொஞ்சுமொழி வார்த்தைகள் கூறி ஒரு கூட்டுப் பறவையாய் உலா வந்தீரே!

இனி உன் அன்புமொழி எங்கே? ஆசை ஆசையான வார்த்தைகள் எங்கே? கேட்க எமக்கு கொடுத்து வைக்கவில்லை! பாரினில் எம்முடன் பண்புடனே பழகி விட்டு நீ நீடுதுயில் கொண்ட சோகத்தை மறக்க மட்டும் சொல்லித் தரவில்லையே என் செல்வமே

எதற்கும் ஒரு முடிவுண்டு! நீ முடிவில்லாமல் முடிந்து விட்டாய் இவ்வளவு நாளும் உன்னை நாங்கள் கண்களுக்குள் தான் வைத்திருந்தோம் அதையும் தாண்டி எங்கள் இதயங்களுக்குள் அடக்கமானாய்!

சுவர்க்கம் உன்னை வைத்து மகிழ்வதை எங்கள் இதயங்கள் உணர்கிறது ஆனால் கண்ணீருக்குத்தான் அது புரியவில்லை. கசப்பான ஞாபக தீயே! உனக்குள்ளிருந்துதான் தூய உதயத்தை எதிர்பார்க்கின்றோம்! உங்கள் இறப்பே பிறப்பாக பார்க்கின்றோம் என் செல்வமே!

எங்கள் விழிப்புக்குள் இருந்த உறக்கத்தை கலைத்த ஆண்டவனே! இந்தப் பிஞ்சுக்குழந்தையின் பிரிவை சுட்டிக் காட்ட உனக்கு உள்ளம் வந்ததோ! நீ தெவிட்டாத கனி காலத்துக்குத்தான் பசி எடுத்து விட்டது மனத்திரையை இருளாக்கி வானுலகம் ஏன் சென்றீர்! தொடமுடியாத தொலையை நோக்கி எமைவிட்டு ஏன் பிரிந்தாய்! காற்றில் கலந்து விட்ட எமது அன்புச் செல்வமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறின் காலை உதயம் எவ்வளவு மகிழ்ச்சியுடன் ஆலயம் சென்றாய்! சந்தோசக் களிப்பில் தாமரை இலைகள் பறித்தாய்! இரக்கமற்ற அரக்க குணை இயமன் உன்னை மறைந்திருந்து பறிந்தானே! கொடியனம்மா! யமன் கொடியவனம்மா

இவ் உலகில் நாம் இருக்கும் வரை உன் பெயர் உச்சரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்! உன் அன்பை எல்லோர்க்குள் வாரி வழங்கியதால் நீ உலகம் உள்ளவரை உயிர் வாழ்வாய் என் செல்வமே!

நீ இல்லை என்பதை இதயம் ஏற்க மறுக்கிறது உள்ளத்தின் வயிறு வேதனைகளால் தான் இன்று நிரப்பப்படுகின்றது. எங்கள் இமை உதடுகளை பிரித்து வந்த வழியாக இதய அறையில் வந்து போகும் மூச்சாக வாழ்ந்திடும் காலம் எல்லாம் மறப்போமா? உன் முகத்தை மன்றாடுகின்றோம் இறைவனை! ஆத்ம சாந்திக்கும் உன் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவுத்துயரால் வாடும்
*த. செல்வதி*
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொட்டு மகிழ்ந்திட்ட முத்துக்கள்
நம் தோளில் வளர்ந்திட்ட சொத்துக்கள்
எமைவிட்டு விரைந்தனரோ?
வீடு குலுங்க சிரிப்பொலிகள் நிதம்
பட்டாம் பூச்சிகளாய் பறந்தனவோ

எட தென்னாருடைய சிவனே
இனி எந்நாட்டவற்கும் நீயே
நிலாவெளி முற்றத்தில் நிதம்
புன்னகை மொழி பேசி
வறுமையைச் செம்மையாக்கிய
வள்ளல் பெருமானின் வாரிசுகள்
பால் மணம்மாறாத பாலகர்கள்

எட கொள்ளைக் கிழவா
தோடுடைய செவியனே
இது யாருடைய சோதனையோ?
பொல்லாத கொடும் போரில்
இல்லாத கொடுமையல்லோ?

சின்னஞ்சிறு சிட்டுக்கள்
சிறகடித்துப் பறந்து திரிந்த
வண்ணச் சோலையில் பூபாளம்
பூகம்பம் ஆனதுவோ

குயில்கள் கூவிய கானத்தில்
ஒப்பாரி நிதம் கேட்கிறதோ



அல்லிமலர்க் கொடியழகு
அள்ளியதோ இவர்களினை

கொள்ளை கொண்ட
கொடும் அரக்கன் அங்குள்ளான்
என்று யார் அறிவார்
ஆழ்கடலுமல்ல ஆற்பரிக்கும்
சமுத்திரமும் அல்ல
கமலம் சித்தரிக்கும் நீரோடை
சலனங்கள் எதுவுமின்றி
சம்மதம் கொடுத்து நின்ற
அழகான வாவியது

முட்டும் தண்ணியிலே
முக்கிழிக்க வைத்தது யார்?
ஒப்பாரி நிதம் கேட்கும்
விதி ஏன் வந்ததுவோ!
நீதி பிழைத்ததோ
நிம்மதி துறந்ததோ
எம் குலப் பெருமானே

உன் வஞ்சம்அறியாத
மழலைக் குஞ்சுகளும்
மாமனுடன் உன் திருவடி
காண மகிழ்வாய் வந்தனரோ?
எங்கே எம் பிள்ளைகள்
இரக்கம் இல்லாதவனே

கல்லில் நீ கடவுளானாய்
உண்மையில் கல்லாகிப் போனாய்
எங்கள் மாணிக்க முத்துக்களை
கரம் கொடுத்து காக்கவில்லையே?

**சிவா தமிழ் (London)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தில் எதிர்பாராமல் நிகழ்ந்த மரண சம்பவத்தால் உடல் வலுவற்று, உள்ளம் சோர்ந்திருந்த வேளையில், எனது குடும்பத்தலைவரினதும் எமது குழந்தைகளினதும் உடல்களை குளத்திலிருந்த மீட்வெடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கு ஆக வேண்டிய கருமங்களை முடித்து வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தும், இரவு பகல் பாராது ஓடோடி வந்து பொருள்உதவி சரீர உதவி மற்றும் வாகன உதவி மற்றும் இன்னோரன்ன உதவிகளை செய்தோருக்கும் கிழக்கு மாகாண புல்மோட்டை தனியார் பேரூந்து சாரதிகள், நடத்துனர், ஊழியர்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டில் இருந்து அனுதாப செய்திகள் அனுப்பியோருக்கும் இறுதி ஊர்வலத்தின் போதும் நல்லடக்கத்தின் போதும், எட்டாம் நாள் நிகழ்வின் போதும் கலந்து கொண்டோருக்கும் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வின் போது கலந்து கொண்டோருக்கும் இவ்நிகழ்வுகள் அனைத்திலும் இரவு பகல் பாராது இறுதிவரை எம்மோடிருந்து உதவி செய்த அனைத்து அன்பு ஊள்ளங்களுக்கும் எமது குடும்பங்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

2ம் வட்டாரம்
நிலாவெளி

இப்படிக்கு
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Executive Secretary/President
Agrarian Service Committee
Nilaveli

Executive Secretary/President
Agrarian Service Committee
Nilaveli

Executive Secretary/President
Agrarian Service Committee
Nilaveli

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களுக்கு
நன்மை செய்வதும்தான்
எல்லா வழிபாடுகளின்
சாரமாகும்.
தீமை செய்பவன்
தனக்கும் மற்றவர்களுக்கும்
தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன்
தனக்கும் பிறர்க்கும்
நன்மை செய்கிறான்.
உடலும் உள்ளமும்
தூய்மையின்றி
கோயிலிற்கு போவதும்
பயனற்றவையாகும்.
நேர்மையுடனும்
தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும்
வாழ்ந்தால்
இறைவனை அடைவது
உறுதி.

நன்னெறியே இறைவணக்கம்
- சுவாமி விவேகானந்தர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பூங்கா - 021 2264014